7th September 1959] [Sri M. S. Selvarajan]

ஏராளமாக வருகின்றன. இவைகளைக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு கண்ட்ரோல் விலைக்கு விற்க வேண்டுமென்று கட்டுப்பாடு விதிக்கக்கூடிய முறையில் சட்டமியற்ற வேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறேன்.

கோயில் நிலங்களையெல்லாம், டௌன்ஷி பார்மிங் திட்டத்திற்கோ, ஜாயிண்டு பார்மிங் திட்டத்திற்கோ உட்படுத்தலாம் என்று நினைக்கிறோம். அவ்வாறு சட்டமியற்றலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த நிலங்களை இது வரையில் யார் யார் அனுபவித்து வந்திருக்கிறார்களோ அவர்கள் இஷ்டப்பட்டால் தான் இது வெற்றியுறுவது சாத்தியமாகும். குத்தகைதாரர், நிலத்தை உப குத்தகைக்கு விட்டிருந்தால் அது கணக்குக்கு வந்திருக்காது. அவர் இஷ்டப்பட்டால்தான் அது கணக்குக்கு வரும். இந்த நிலையில் அந்தத் திட்டங்கள் வெற்றியுறும் என்று நம்புவதற்கில்லை. ஆகவே உண்மையாகவே பயிர் செய்து வருபவர்களைக் கொண்ட கூட்டுறவுச் சங்கமாகச் சேர்ப்பதற்குரிய சட்ட ரீதியான வழி வகைகள் செய்யப்படவேண்டும்.

இன்று ஆலயங்களுக்கு அதிக வருமானம் வருகிறது. அவைகளுடைய வருமானம் அதிகரித்து வருகிறது. பல்வேறு சட்டச் சிக்கல்களிலிருந்து விடுபட விரும்புபவர்கள் கோவிலுக்குச் சென்று ஆண்டவனிடம் அபயம் கேட்கிறார்கள். அவர்கள் கோவில்களுக்குப் பணம் கொடுக்கிறார்கள். இவ்வாறு ஆலயங்களுக்குள் ஏராளமான பணம் வருவதைப் பார்க்கிறோம். நியாயமாக அப்பணம் சர்க்காருக்கு, சமூகத்திற்குச் சொந்தமானதாகக் கூட இருக்கலாம். ஆகவே சமூகத்தில் எல்லோருக்கும் நல்ல காரியங்கள் செய்யப்படவேண்டுமென்ற பொறுப்புணர்ச்சியுடன் செயலாற்றவேண்டும். அவர்கள் கூன், குருடு செவிடு, குஷ்டரோகிகள், அனாதைகள் ஆகியவர்களுக்கு ஜாதியுமில்லை, மதமுமில்லை. ஆகவே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கருத வேண்டும் ; சமூகத்தில் பாரபட்சம் காட்டக்கூடாது என்று நினைக்க வேண்டும். குஷ்டரோகிகள், கூன், குருடு, செவிடு ஆகியவர்களிடையே தாரதம்மியம் காட்டாததாக இந்தச் சட்டம் அமைய வேண்டும். அந்த முறையில் இந்தச் சட்டம் அமையுமானால் இது மிகவும் வரவேற்க வேண்டியது தான் என்றும், இதைக் கொண்டுவந்தவர் நவீன மனுவோ என்று எதிர்கால சந்ததியினர் நினைத்து இதைப் பெரிதும் பாராட்டி வரவேற்பார்கள் என்று கூறி என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-30 p.m.

The House then adjourned.

TRUTH ALONE TRIUMPHS

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

91. ***Amendments to the Madras Cinemas (Regulation) Rules,*** *1957, issued with G.O. Ms. No. 1964, Home, dated 8th July 1959. [Laid on the table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).]*

92. *Notification under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948, issued with Memo. No. 56563-J-3/58-2, Revenue, dated 20th July 1959. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

93. *Notification under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *issued with Memo. No.* 16539-*J*-3/59-4, *Revenue, dated* 17*th May* 1959. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

B. Reports, Notifications and other papers.

52. *Notification issued with G.O.Ms. No.* 1912, *Home, dated* 3*rd July* 1959, *under the Madras Motor Vehicles Taxation Act*, 1931. [*Laid on the table of the House under section* 10 (3) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS